# செழிப்புக்கான வசனம்

- அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார். **2 நாளாகமம் 26:5**

- நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. **2 கொரிந்தியர் 8:9**

- மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். **2 கொரிந்தியர் 9:8**

- என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். **பிலிப்பியர் 4:19**

- யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். **ரோமர் 10:12**

- தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. **ஆதியாகமம் 27:28**

- ஏற்ற காலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய். **உபாகமம் 28:12**

- அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்பண்ணினார்; அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை. **சங்கீதம் 105:37**

- கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை உண்டாக்கும், அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். **நீதிமொழிகள் 10:22**

- ஆகையால் பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் போஷிப்பேன் என்று சொல்லி, அவர்களைத்

தேற்றி, அவர்களோடே அன்பாகப் பேசினான். **ஆதியாகமம் 50:21**

- ஆகிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற தேசத்திலே, கர்த்தர் உங்களை மிகவும் ஆசீர்வதிப்பார்; ஆகையால் உங்களுக்குள் தரித்திரன் ஒருவனும் இருப்பதில்லை. **உபாகமம் 15:4**

- உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை நிலைநிறுத்தும்படி, ஐசுவரியத்தைச் சம்பாதிப்பதற்கான பலனை உனக்குக் கொடுக்கிறவர் அவரே. **உபாகமம் 8:18**

- தேவன் எந்த மனுஷனுக்கு ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கொடுத்து, அதிலே அவன் புசிக்கவும், தன் பங்கை அனுபவிக்கவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் கிருபை அளிக்கிறாரோ, அதுவும் தேவனுடைய ஈவே. அவன் தன் ஜீவநாட்களை அதிகமாய் நினைக்கிறதில்லை; தேவன் அவன் இருதயத்தின் மகிழ்ச்சிக்கு ஏற்றபடி அவனை உத்தரவாதம் பண்ணுகிறார். **பிரசங்கி 5:19-20**

- மனுஷர்களை எங்கள் தலைகளின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; நெருப்பிலும் தண்ணீரிலும் புகுந்துவந்தோம்; ஆனாலும் செழிப்பான இடத்திலே எங்களை விடுவித்தீர். **சங்கீதம் 66:12**

- இப்பொழுதும் என் மகனே, கர்த்தர் உன்னோடே இருப்பாராக; நீ கர்த்தரைப்பற்றி உனக்குச் சொன்னபடியே, உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவாயாக. **1 நாளாகமம் 22:11**

- அப்பொழுது நான் அவர்களை நோக்கி: பரலோகத்தின் தேவன் எங்களுக்குக் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்; ஆகையால் அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்; உங்களுக்கோவென்றால், எருசலேமில் பங்கும் உரிமையும் நினைப்பும் ஒன்றுமில்லை என்றேன். **நெகேமியா 2:20**